சுத்தத்திற்கும் சுவைக்கும் புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை, அன்பான உபசரிப்பு!
சைவ போசனகாரர் மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில் சந்தி)
288 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | பங்குனி 22 | ஜ அ 17 | இதழ் 54
யாழ்ப்பாணம் | வெள்ளிக் கிழமை | 4-4-80

## ஷா உற்சாகமாக இருக்கிறார்

கெய்ரோ, ஏப். 3
ஈரானிய ஷாவின் கல்லீரலை அகற்றுவதற்காகச் செய்யப்பட்ட சத்திர சிகிச்சையின் பின்னர் அவர் விரைவாகச் சுகமடைந்துவருவதாகவும் ஷா மிகுந்த உற்சாகமாகக் காணப்படுகிறார் என்றும் வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1980-4-7
PERIODICALS DIVISION

‘சட்டப்படி வேலை’ இயக்கத்தை

# தபால் அதிபர்கள் கைவிட்டனர்!

(கொழும்பு)

கொழும்பு தபாலதிபர்கள் மேற்கொண்டிருந்த சட்டப்படி வேலைசெய்யும் இயக்கம் நேற்றுடன் கைவிடப்பட்டது.

தபாற் தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்காவுக்கும், தபால் அதிபர்கள் தொழிற்சங்கத் தலைவர்களுக்குமிடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னரே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தபாலதிபர்கள் தற்போது மேற்கொண்டிருந்த சட்டப்படி வேலை இயக்கத்தினால் 250 தபாற்பைகள் விநியோகிக்கப்படாமலிருப்பதாக கொழும்பு பிரதம தபாலதிபர் நேற்றுத் தெரிவித்தார்.

இன்று இவற்றை விநியோகிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தொலைபேசி இணைப்பு—தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்கள் — வணிகபிவு, தொலைபேசி நாமப்பதிவு ரிப்பு, வயர்லஸ் லைசென்ஸ் விநியோகம் போன்ற கடமைகளைச் செய்துவரும் பிரிவுத் திணைக்களத்தின் பொறியியல் பிரிவுடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்தே சட்டப்படி வேலைசெய்யும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

தகுதிவாய்ந்த அதிபர் நியமனம்:

## ஒஸ்மானியா மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு தகுதிவாய்ந்த பட்டதாரி அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் மீண்டும் வகுப்புகளுக்குச் சென்றுள்ளனர்.

தகுதியான ஒரு அதிபரை நியமிக்கவேண்டும் என்றும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கவேண்டும் எனவும் கோரி கடந்த ஒரு மாதமாக மாணவர் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வந்தனர்.

மாணவர்கள் தமது கோரிக்கைகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம் எச். முகமது, யாழ்ப்பாணம் எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரிடம் முறையிட்டிருந்தனர்.

இவர்கள் எடுத்த தீவிர முயற்சி காரணமாக யாழ் வாசிசி முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஜனாப் எம். ஏ ஆர். ஏ றகீம் தகுதிவாய்ந்த அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அதிபர் நியமிக்கப்பட்ட செய்தி மாணவ வட்டாரங்களில் தெரிந்ததும் நேற்றுக்காலை சகல மாணவ மாணவியரும், சீருடை அணிந்து புதிய அதிபரை வரவேற்க பாடசாலை முன்றலில் குழுமி நின்றனர்.

புதிய அதிபர் நேற்றுக்காலை 9-15 க்கு பாடசாலைக்கு வந்ததும், அதிபரை இன்முகத்துடன் வரவேற்று மாணவர்கள் வகுப்புகளுக்குச் சென்றனர். நீண்டகால இடைவெளிக்குப்பின் நேற்று வழமைபோல் வகுப்புகள் நடைபெற்றன. (கெ-கொ-கு)

யாழ். ஆஸ்பத்திரி கொலை:

அடையாள அணிவகுப்பு

# ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரிக் கொலைச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு இம்மாதம் 11ந் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

யாழ் நீதிமன்றத்தில் நீதவான் கே. யோகநாதன் முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நேற்று நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பைச் சுகவீனம் காரணமாகச் சாட்சிகள் வராததால் நீதவான் 11ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

யாழ் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த மண்டைதீவைச் சேர்ந்த சண்முகலிங்கம் ஸ்ரீதரன் கொலை செய்யப்பட்டது தொடர்பாகச் சந்தேகநபர்களான ஆனந்தன், ஸ்ரீகாந்தரரசா கைலைவாசன், சிவபாலன் வேலுப்பிள்ளை ஆகியோர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிரத்தினம், கே. வி. எஸ். சண்முகநாதன், வி. கனகசபாபதி, ரி. சோமசுந்தரம் ஆகியோர் ஆஜராகினர்கள்.

இச்சம்பவம் தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 6வது சந்தேகநபரான வேலுப்பிள்ளையை நீதவான் 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

வழக்காளி தரப்பில் பொலிஸாரின் உதவியுடன் சட்டத்தரணிகள் ஸ்ரீரங்கன், ஏ. அன்ரனி ஆகியோர் ஆஜரானார்கள். (க-கு)

# மாணவி கமலா மரணம் கொலை எனத் தீர்ப்பு!

## கற்புக்குப் பங்கம் ஏற்படவில்லை என்று டாக்டர் சாட்சியம்

### தற்கொலை முயற்சிக்கான ஆதாரமும் இல்லையாம்



கொலையுண்ட மாணவி கமலா

(புலோலி)

வடபகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய டியூட்டரி மாணவி கமலா ராமச்சந்திரன் மரணம் தொடர்பான மரண விசாரணையை நடத்திய பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன், நேற்றுக் கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சட்டமா அதிபரின் கட்டளையின் பேரில், பருத்தித்துறை மாஜிஸ்திரேட் இம் மாதம் 1ந் தேதி மீண்டும் மரணவிசாரணையை ஆரம்பித்து நேற்றுத் தீர்ப்பு வழங்கினார்.

மரண விசாரணையின்போது சாட்சியமளித்த யாழ் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவன் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

“கமலா மாதவிலக்காக இருந்ததற்கான அறிகுறிகள் காணப்பட்டன அவருடைய கழுத்து நெரிக்கப்பட்டிருந்தது. அதனால் ஏற்பட்ட மூச்சுத்திணறலினால் கமலா மரணமானதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

“யாழ் ஆஸ்பத்திரியில் கமலாவின் பிரேதத்தைப் பரிசோதனைசெய்தேன். அப்போது அவரது உடலில் பல காயங்கள் காணப்பட்டன. கமலாவின் உதட்டிலும், நெற்றியிலும், புருவத்திலும், கழுத்திலும், காலிலும், கையிலும் காயங்கள் காணப்பட்டன. காயங்கள் பல காணப்பட்டபோதிலும், கமலாவின் கற்புக்குப் பங்கம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை. உடலில் ஏற்பட்ட வேறு சில காயங்களிலிருந்தும் இரத்தம் வெளியேறியுள்ளது

“சம்பவதினம் கமலாவின் கழுத்து நெரிக்கப்பட்டிருக்கிறது. கழுத்து நெரிக்கப்பட்டதனால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு அவர் மரணமானார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவன் மேலும் கூறுகையில், “தற்கொலை முயற்சி செய்தார் என்பதற்கு ஆதாரமாகக் கம

(8-ம் பக்கம் பார்க்க)

BASINTAPS WHEEL VALVE
இறக்குமதி செய்த
குரோமியம் பேசின் ரப்ஸ்
CHROMIAM BASIN TAPS
கிட்ஸ் வீல்வால்வ்
"KITZ" WHEEL VALVE
½ அங், ¾ அங், 1 அங், 1½ அங், 2 அங்குல அளவுகளில் எம்மிடம் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனைக்குண்டு
சித்தி விநாயகர் ஸ்ரோர்ஸ்,
270 A, STANLEY ROAD, JAFFNA
(5374)

வெங்காய விதை
இறக்குமதி செய்யப்பட்ட பூசா ரெட்ரக வெங்காய விதைகள் இன்றுமுதல் கிடைக்கும்
உங்கள் தேவைக்கு:
பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 5366

HONDA C. D. 200
புத்தம் புதிய
மோட்டார் சைக்கிள்களுக்கு
உடனடியாகப் பதிவு செய்யுங்கள்
முந்துங்கள்
ஏனைய மொடல்களும் உடன் விற்பனைக்குண்டு
ஜுபிட்டர் ட்ரேடிங் கம்பனி
15, சென் பீட்டர்ஸ் லேன்
ஆஸ்பத்திரி வீதி. — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7342
இலங்கையின் ஏக விநியோகஸ்தர்கள்!
ஸ்ரபோர்ட் மோட்டார் கம்பனி லிமிட்டெட் 5361

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சிறிது பாவித்த Ailse Graig ரோலபோட் இங்கிலாந்து டீசல் என்ஜின் இரண்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். வை. இளங்கோ 34/3, கனகபுரம், கிளிநொச்சி 5360

உன்னதநிலையிலுள்ள 9 ஸ்ரீ தொடர்பிலக்கமுடைய CB125 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு விபரங்கட்கு; B. சபாநாதன், 14, மணல்த்தறை லேன், கந்தர்மடம். 5362

E L 9428 3 பாட் கொன்சல் ஓடும்நிலையில் விற்பனைக்கிருக்கின்றது. யாழ் கடற்கரை வீதி கவால் நிலைய பங்களாவில் பார்வையிடலாம். 5379

### தேவை

மன்னாரில் தேநீர்க்கடை ஒன்றில் சமையல் வேலை செய்வதற்கும், சப்பிளைசெய்வதற்கும் ஆட்கள் தேவை. வயதெல்லை கிடையாது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும். 'கந்தவிலாஸ்', பெரிய கடை, மன்னார். 5388

**அ. குமரகுரு,**
ஜே. பி., யூ. எம்.
சட்டத்தரணி,
காங்கேசன்துறை.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

இளவாலையைச் சேர்ந்த நாகரெத்தினம் செந்தில் வேல்ராஜா என்பவரின் மரணசாதனமற்ற சொத்துக்களின் நிர்வாகம் தொடர்பான விடயத்தில்

— மரணமெய்தியவர் செந்தில்வேல்ராஜா கைம்பெண் இராசேஸ்வரி, இளவாலை, வடக்கு, இளவாலை. — மனுதார் வழக்கு இல; ரி. 59.

எதிராக

1. செந்தில்வேல்ராஜா மகன் அருந்ததி
2. செந்தில்வேல்ராஜா மகன் வாசுகி இருவரும் இளவாலை வடக்கு, இளவாலை. ]1-ம், 2-ம் எதிர்வாதிகள் பராயமற்றவர்கள் தங்கள் வழக்குப் பாதுகாவலர் 3-ம் எதிர்வாதி மூலமாக)
3. தண்டிகை சுப்பிரமணியம், இளவாலை வடக்கு, இளவாலை.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ந்திகதி முற்பகல்9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றிஅவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு மாசி மாதம் 22-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

(ஒப்பம்)
மூ. நல்லலிங்கம்.
பதிவாளர்.

5312

## வள்ளுவர் விழா போட்டி முடிவுகள்

(ஊரெழு)

ஊரெழு கணேசவித்தியாசாலையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவையொட்டி திருக்குறள் மனனப், பேச்சுப்போட்டிகள் முடிவுகள் வருமாறு:-

திருக்குறள் மனனப்போட்டி பாலர் பிரிவு:- அ. சத்தியேந்திரா, ப. சாந்தி, க. ஜெயதேவி, கீழ்ப் பிரிவு:- ப. பார்த்திபன், க. சுதா, கி. சந்திரிகா, மத்திய பிரிவு:- சி. வளர்மதி, ந. அனுஷா, அ. தனுஷா, மேற் பிரிவு: த. ராகினி, அ. கலாவதனி, ந. ஸ்ரீவதனி, பேச்சுப்போட்டி:- பாலர் பிரிவு:- க. சசிகலா, வா. காமினி, அ. சத்தியேந்திரா, கீழ்ப்பிரிவு:- சி. சித்திரா, தி. விக்னேஸ்வரி, ப. பார்த்திபன், மத்திய பிரிவு:- ச. சுகந்தன், கா. கமலாதேவி. சி. வளர்மதி, மேற் பிரிவு:- யோ. சற்குணதேவி, பு. மாலினி, நா. மோகனராசா.

## டிட்டோவுக்கு தொற்று நோய்!

பெல்கிரேட், ஏப். 3

யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோவுக்கு இப்போது தொற்றுநோய் ஒன்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொற்றுநோய் காரணமாக அவருடைய ... வருத்தங்களுக்கு கொடுக்கும் மருந்துகளினால் எதுவித பலனும் ஏற்படாதிருக்கிறதென்று 8 டாக்டர்கள் ... அறிவித்தது. (இ)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை,

சைக்கிள் கொட்டில்கள் அமைப்பதற்காகப் பொறியிடப்பட்ட கேள்விகள் இணைப்படியில் 1980-04-18-ம் திகதி மு. ப. 11-00 மணிவரை இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

கடிதஉறையிலே இடதுபக்க மேல்மூலையில் "சைக்கிள் கொட்டில்களை அமைப்பதற்கான கேள்வி" என எழுதப்படல்வேண்டும்

மீளளிக்கும்வைப்பான 250/- ரூபாவையும் மீளளிக்கப்படாத கட்டணமான 50/- ரூபாவையும் செலுத்திய பின்னர் 1980-04-03-ம் திகதி தொடக்கம் 1980-04-17-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழமையான வேலை நேரங்களில் இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உதவிப் பதிவாளரின் (நிருவாகம்) அலுவலகத்தில் கேள்விப் படிவங்களின் தொகுதி இணைப்படியல் வழங்கப்படும். கடந்த மூன்று ஆண்டுகளில் 150,000/- ரூபாவிற்குக் குறையாத வேலையைத் திருப்திகரமாகப் பூர்த்தியாக்கியமைக்கான சான்றை அளிக்கும் ஏதாவது அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது வேறுஎந்தவொரு பல்கலைக்கழகத்தின் அத்தகைய வேலையைச் செய்வதற்காகப் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

வேறுதேவையானவிபரங்களை நேரடியாக உதவிப் பதிவாளரின் (நிருவாகம்) அலுவலகத்தில் வழமையான வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 5390

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 23-ம்திகதி
(4-4-80)
வெள்ளிக்கிழமை

**மேடம்:** மனதில் அமைதி குன்றும் எதிரிகள் எக்காளமிடுவர் மறைந்த நிலைவுகள் மீண்டும் தலைதூக்கும் அமைதியே நன்று அறிவுக்கு நலம் உண்டு

**இடபம்:** தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் களஸ்திர வழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு. கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் புதிய நண்பர்கள் சேருவார்கள்.

**மிதுனம்:** நாள் எல்லாம் அலைச்சல் உடல் நலிவு தோன்றும் பணிக்கு இடம்கொடாது சுகாதாரத்தைப் பேணவும்.

**கடகம்:** பொதுத்துறையில் அதிக மனநாட்டம் செலுத்துவீர்கள் சிலர் அரசியல் துறையிலும் அடியெடுத்து வைக்கலாம் பெரியவர் ஒருவருடைய அறிவுரைகள் முன்னேற்றத்தைத் தரும் நல்லநாள்.

**சிங்கம்:** புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும் கூட்டுவியாபாரத்தால் முன்னேற்றமுண்டு புதுமனை கட்டுவதிலும் சிரெத்தை கவனம் திட்டப்படலாம். பணபலமும் உண்டு

**கன்னி:** வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும் சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும் புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** தானிய விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் அதிக சிந்தனையின் மூலம் சிறிய தலையிடியும் தோன்றக்கூடும் அமைதி விரும்பத்தக்கது.

**விருட்சம்:** பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத்தரும் பிறருடன் பகைத்துக்கொள்ளவும் நேரிடும் குடும்பத்திலும் சிறிது புயல்வீசலாம் வெளியிடத் தொடர்புகளில் அமைதி வேண்டும்.

**தனு:** பேச்சு வன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள் கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு சிலருக்கு அதிஷ்டலாபம் கிடைக்கலாம் சிறப்பானதினம்.

**மகரம்:** தற்பெருமை மூலம் தடுமாற்றம் கண்துடைப்பு வேலைநடக்கும் கவனம் செலுத்தவும் பெரியோரைப் பகைத்துக்கொள்ளாமல் பெருமையை பேணி நடக்கவும்.

**கும்பம்:** எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி காணப்படுகின்றது மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக்கிடைக்கும் எதிர்பாராத இடத்திலிருந்து பொருளவரவுக்கு இடமுண்டு. நண்பர்களின் உதவியும் அவசியம் உண்டு.

**மீனம்:** புரட்சிகரமான பாதுகாப்புக்களை விரும்புவீர்கள் வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் பிறக்கும் உங்கள் முன்னேற்றத்துக்கு அரசியல் வாதி ஒருவர் ஆதரவு கொடுப்பார் இதயத்தை ... பலப்படுத்து

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க.வேலுப்பிள்ளை**

## சீன இந்திய விமானப் போக்குவரத்து

புதுடில்லி, ஏப். 3

சீன - இந்திய விமானப் போக்குவரத்து விரைவில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து இந்திய-சீன அதிகாரிகளிடையே விரைவில் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது.

---

உ

## வரவேற்புபசார அழைப்பு

அன்புடையீர்!
ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் கிருபையால்

| | |
|---|---|
| எங்கள் புத்திரன் சிரஞ்ஜீவி ஜகந்நாத சர்மாவிற்கும் (பங்காளர் துர்க்கா அச்சகம்) | ப. யோகேஸ்வரக் குருக்களின் புத்திரி சௌபாக்கியவதி கமலாம்பிகைக்கும் |

மங்களகரமாக நிறைவெய்திய திருமணவிழாவையொட்டி நிகழும் சித்தார்த்தி வருடம் பங்குனி மாதம் 23-ந் திகதி (5-4-80) சனிக்கிழமை மாலை 4 மணி முதல் எமது இல்லத்தில் நடைபெறும் வரவேற்புபசார விழாவில் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி,
தெல்லிப்பழை,
29-3-80.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
வ. குகசர்மாவும் பாரியாரும்.
5358

## யாழ். / ஐக்கிய லாபநிதி பற்றுவரவுடையோர் சங்கம்

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 6-4-1980 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு பெரியகடை கே. கே. எஸ். வீதியிலுள்ள பாரதி பாஷிய பாடசாலையில் நடைபெறும்.

அங்கத்தவர் யாவரும் சமுகம் தரவும்.

செயலாளர்
536?

யாழ்ப்பாணம் **சித்ராலயா** ஸ்தாபனத்தாரின்

## "போட்டோ ஸ்ரட்"

சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது
5 நிமிடத்தில் சிறந்த துலக்கமான
"போட்டோ ஸ்ரட்" பிரதிகளை
எடுத்துக்கொள்ளலாம்

✶ உறுதிகள் ✶ சான்றிதழ்கள்
✶ கட்டிட வரைபடங்கள்

அனைத்தும் **"போட்டோ ஸ்ரட்"** பிரதியாக எடுக்கலாம்.

## சித்ராலயா.

(படப்பிடிப்பாளர்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 522 (537?)

## பிஸ்கால் விற்பனை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

பொன்னம்பலம் கைம்பெண் விஜயாம்பாள்
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
வழக்காளி

வழக்கு இல: காசு. சு/593

எதிர்
கதிர்காமு செல்லக்கண்டு,
41, நாயன்மார் வீதி, யாழ்ப்பாணம்.
எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா ?600-00ம் முதல் ரூபா 3000-00க்கு 18-12-78 தொடக்கம் 26-3-1979 வரைக்கும் நூற்றுக்கு 100)12% வட்டியும் தீர்வைத் திகதியிலிருந்து முழுத் தொகையும் இறுக்கும் வரை முழுத்தீர்வைத் தொகைக்கும் 5% வட்டியும், இவ்வழக்கின் செலவும், பிஸ்கால் செலவும் படுண்டேச்சுப் அறவாக்குவதற்காக கீழே விபரித்துச் சொல்லப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "சோனகன் வளவு" நில. பர. 3 குளி 3. இதில் மேற்குப் பக்கமாக நில. பர. 1 நீக்கி மிகுதி நி. ப. 2 இரண்டு குளி 3 மூன்றும் நிலம் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு சிங்கராசா சிவசுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆசனங்கள், மேற்கு அ. மதனவாணியின் ஆதனம், தெற்கு ரோட்டு இதடங்கலும்.

கா. மகேந்திரராசா,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்,
01-04-80.

5385

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாம் வேண்டாம் என்று துறந்து விட வேண்டிய ஒரு பொருளை அல்லது ஒரு நன்மையை யாரும் இலவசமாத் தந்தாலும் அதை வாங்காது மறந்துவிடவேண்டியது எமது கடமையாயுளது.

— மகாத்மாகாந்தி

# இன்று திருப்பாடுகளின் வெள்ளி



இன்று பாஸ்கு திரி தினத்தின் இரண்டாம் நாள். கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் மிகப் புனிதமான நாள். ஆண்டவர் நம்முடைய மீட்புக்காகத் தம் உயிரைத் தகனப்பலியாக்கிய தியாகநாள். சிலுவை மரணம் வழியாக உலகம் முழுவதற்கும் விடுதலை பெற்றுத் தந்த நாள்

### சிலுவை வழி

இன்றைய வழிபாட்டில சிலுவை முக்கிய இடத்தை வகுக்கின்றது. சிலுவை வழி செல்லாது கிறிஸ்துவைப் பின் செல்ல முடியாது. ''என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்து தன் சிலுவைகளைச்சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும் என்கிறார் இயேசு. குழந்தைக்கு நடை பயிற்றுவிக்கும் தாய் கூடவே நடந்து காட்டுவாள். இயேசுவும் துன்பத்தை ஏற்று, சிலுவையே மீட்பின் வழி என்பதைத் தம் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார். நான் ஒரு வழிகாட்டி எனக் கூறவில்லை. மாறாக ''நானே வழி'' என்றார்.

நான் உண்மையை உரைப்பவன் என்று கூறவில்லை மாறாக ''நானே உண்மை'' என்றார். என்னிடத்தில் வாழ்வு உண்டு என்று கூறவில்லை. மாறாக ''நானே வாழ்வு'' என்றார். ஆம் உயிராக, வழியாக, வாழ்வாக, உண்மையாக, உணவாக விளங்கும் இயேசு நம் அனைவருக்கும் காட்டிய வழி சிலுவைவழி.

சிலுவையைக் கிறிஸ்துவைப் பின் செல்ல முடியாது. துன்பந்தான். சிலுவை தான் ஒருவர் மன்னியுங்கள். என்று கூறியவர்தானே முதலில் சிலுவையில் இத்தனை வேதனைகளுடன் தொங்கிய வேளையிலும் அவர், பிதாவே இவர்களை மன்னியும், இவர்கள் இன்னது செய்கிறார்கள் என்று தெரியாமல் செய்கிறார்கள் என்று தந்தையிடம் மன்றாடுகிறார். இயேசுவின் புதிய அன்புக் கட்டளை நம்மையும்...

—பிறருக்காகத் தியாகம் செய்ய, உயிரையேகொடுக்கத் தயாராக வேண்டும் என்று கூறுகிறது.

—நம் பகைவரையும், எதிரிகளையும் நேசித்து அவர்களுக்காகச் செபிக்கவும் வேண்டும் என்று கூறிகிறது. இயேசுவே இவ்வன்புக் கட்டளைக்குமாதிரி நாமும் அவரைப் பின் செல்வோம்.

## 'நானேவழி! நானேஉண்மை! நானேவாழ்வு!'

நமக்கு இன்பத்தைப் பெற்றுத் தரும். நமது வாழ்வில் கால மாறுபாட்டால், கடமைவேறுபாட்டால் துன்பங்கள் வரலாம். சிக்கல்கள் தோன்றலாம் அப்போது மனந்தளராது சிலுவை என்னும் கழுமரத்தைச்சுமந்து கல்வாரியில் உயிரைக் கொடுத்த இயேசுவை எண்ணுவோம். அவரை அணுகுவோம். நம்பிக்கையுடன் நோக்குவோம். வாழ்வு பெறுவோம்.

### வழிபாட்டில் தொடர்ச்சி

பாஸ்கா திரிதினத்தின் முதலாம் நாள் வழிபாட்டுச் சடங்குகளுக்கும், இரண்டாம் நாள் சடங்குகளுக்கும் இடையே பெரும் தொடர்பு உண்டு. போதனைகளைச் சாதித்துக் காட்டிவிட்டார்.

### மன்னியுங்கள்

ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவுங்கள். ஒருவரை

### பலியின் நிறைவேற்றம்

''கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொளிய பலன் தராது'' ஆம் இயேசு கடைசி இராவில் ஏற்படுத்திய பூசைப் பலியை சிலுவையில் இரத்தம் சிந்தி தன்னை முழுமையாக பலியாகக் கல்வாரி மலையில் சிலுவையில் ஒப்புக்கொடுக்கிறார். மரணத்தைத் தாழ்மையாக ஏற்றுக்கொண்டார். எல்லாம் நிறைவேறிற்று என்று தன்னையே

— அருட்திரு மேரி பஸ்ரியன் —

பெரிய வியாழன் அன்று இயேசு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறார். ''நான் உனக்கு அன்பு செய்ததுபோல உன் அயலானையும் அன்பு செய்'' இவ்வன்புக்கட்டளையைத் தன் வாழ்வில் நெறிப்படுத்துகின்றார். வாழ்ந்து காட்டுகின்றார். அன்பின் உச்ச நிலை? ''தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு இல்லை'' என்றவர், இவ் உயர்ந்த அன்பையே நமக்குக் கொடுக்கிறார். நமக்காக, நம்மேல் வைத்த அன்பிற்காக, நம் பாவங்களுக்குப் பரிகாரமாக தன்னையே பலியாக, இரத்தம் முழுவதும் சிந்தி ஒப்புக்கொடுக்கிறார். இசையால் இறைவாக்கினர் கூறியது போல, ''மெய்யாகவே நம்முடைய பிணிகளை ஏற்றுக்கொண்டார். நம்முடைய நோய்களைச் சுமந்து கொண்டார். நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார். நம் அக்கிரமங்களுக்காகவே அவர் நொறுக்கப்பட்டார்''

ஆம். இயேசு தம்மை [illegible] காட்டிவிட்டார். இவர் கூறிய பலியாகிப் பிட்டு உலக மக்கள் அனைவருக்கும் கொடுக்கிறார். மீட்பு, விடுதலை, புதுவாழ்வு! எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் கூறப்படுவதுபோல ''நம் பாடுகளாலும், திருச்சிலுவை மரணத்தாலும், கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்து ஆண்டவர் நிறைவுள்ளவராகி தமக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணமானார்.

எனவே நாமும்...

கிறிஸ்துவைப் போல் நாம் துன்பத்தை இறைவனுக்குப் பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இதுதான் நாம் இறைவனுக்குச் செலுத்தும் ஞானப்பலி.

### மக்கள் கருத்து

## வெளியேறினரா வெளியேற்றப்பட்டாரா?

சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற தந்தை செல்வநாயகத்தின் பிறந்ததின விழாவில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நிகழ்த்திய உரையினை இம்மாதம் 2ம் திகதி 'ஈழநாடு' இதழ் வெளியிட்டுள்ளது. தமது பேச்சில் மாண்புமிகு திரு. அமிர்தலிங்கம் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினம் தமிழரசுக்கட்சியிலிருந்து 'வெளியேறியது' தொடர்பாகவும் பிரஸ்தாபித்திருக்கிறார். இது பற்றிய உண்மையை தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

'65ம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டது. அதை எதிர்த்து இயக்கத்தைப் பிளவுபடுத்தி வெளியேறியவர் ஊர்காவற்றுறை உறுப்பினர் திரு. வி. நவரத்தினம். அவரோடு சேர்ந்து இளைஞர்கள் சிலர் வெளியேறினர். அதனால் கட்சி பலவீனப்பட்டது. திரு. நவரத்தினம் கட்சியைப் பலவீனப்படுத்தினரே தவிர வேறு எதையும் அவரால் சாதிக்க முடியாமல் போயிற்று. அவருக்குப் பின்னால் சென்ற இளைஞர்கள் பலர் இன்று சுதந்திரக் கட்சியிலும் ஐக்கியதேசியக் கட்சியிலும் சேர்ந்துள்ளனர். என்று மாண்புமிகு அமிர்தலிங்கம் பேசியதாக ஈழநாட்டுச் செய்தி தெரிவிக்கின்றது.

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி.நவரத்தினம் தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேறியவர் அல்ல— வெளியேற்றப்பட்டவர் என்பதையும் இந்த வெளியேற்றத்திற்குக்காரணமாக அமைந்தது மலைநாட்டுத் தமிழர்களை நாடுகடத்தும் ஸ்ரீமாவோ — சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதாவிற்கும் அடையாள அட்டை மசோதாவிற்கும் திரு. நவரத்தினம் காட்டிய தீவிர எதிர்ப்பே என்பதையும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் தமிழ்மக்கள் மறந்திருக்க முடியாது.

தமிழரசுக்கட்சி பலவீனப்பட்டதற்கு உண்மையில் திரு. நவரத்தினம்தான் காரணமென்றால் அதை அடுத்து வந்த 70ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கட்சியின் பெரும் தலைகள் சில உருண்டதற்கும் அவரேதான் காரணமாக இருக்க முடியும். இதைமாண்புமிகு அமிர்தலிங்கம் ஏற்றுக் கொள்வாரேயானால் நாமும் ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

இயக்கமா? அல்லது இலட்சியமா? என்ற கேள்விக்கு இலட்சியத்தைப் பலியிட்டு இயக்கத்தோடு ஒத்துழைத்திருந்தால் ஒருவேளை திரு. நவரத்தினத்தை மாண்புமிகு திரு. நவரத்தினம் என்று அழைக்க வேண்டிய நிலைகூட இன்று ஏற்பட்டிருக்கலாம். எது எப்படி இருந்தபோதிலும் தமிழரசுக் கட்சி என்ற நாமமே இன்று இல்லாமல் போயிருப்பதற்கு யார் காரணம், எது காரணம் என்பதை உண்மையான தமிழரசு விசுவாசிகள் அறிவார்கள்.

திரு. நவரத்தினத்திற்குப் பின்னால்சென்ற இளைஞர்களில் ஐக்கியதேசியக் கட்சியிலும் சுதந்திரக் கட்சியிலும் சேர்ந்துள்ளவர்கள் யார் யார் என்பதை மாண்புமிகு அமிர்தலிங்கம் பகிரங்கப்படுத்தினால் நிச்சயமாக எமது நன்றி அவருக்குரியது. அதே நேரத்தில் கனகரத்தினங்களையும், இராசதுரைகளையும், தொண்டமான்களையும் அவர் மறந்துவிடக் கூடாது என்பதுதான் எமது பணிவான வேண்டுகோள்.

உண்மைக்குப் புறம்பாக ஊர்காவற்றுறை முன்னாள் உறுப்பினரைப்பற்றி நடந்தவை அனைத்தையும் நன்றாக தெரிந்துள்ள மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருப்பதுதான் வேதனையைத் தருகின்றது. அது மாத்திரமல்ல, வேதனைகளையும் சோதனைகளையும் தமிழினத்திற்குத் தேடித் தந்திருப்பவர்கள் சாதனைகளைப்பற்றிப் பேசுவது வேடிக்கையாகவும் இருக்கின்றது.

திருப்பித் திருப்பிச் சொல்வதனால் மாத்திரம் எதுவும் உண்மையாகிவிடப் போவதில்லை. ஆனால் உண்மைக்குப் புறம்பானவை மறுக்கப்படவில்லை என்றால் காலப்போக்கில் அவை உண்மையாகவும் தோன்றக்கூடும். என்பதினாலேயே இந்த விளக்கத்தை அளிக்க வேண்டியிருக்கிறது.

**ந. ஸ்ரீகாந்தா**
துணைச்செயலாளர்,
தமிழர் சுயாட்சிக்கழகம்.

ஃ ஃ ஃ

### மின்விநியோகத்தில் கோளாறு

கடந்த 29ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் சித்தன்கேணிப் பகுதிக்கு மின்சாரம் சீரற்றமுறையில் விநியோகிக்கப்படுவதால் இப்பகுதி மின்சார பாவனையாளராகிய எமக்கு, ஒளியின்மையும் பல நஷ்டங்களும் ஏற்பட்டுள்ளன.

இன்றுவரை மேற்படி விஷயமாக எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாதவிடத்தில், எமது பாவனையாளர் சிலர் சுழிபுரம் விசேஷ ஆணையாளரிடம் தெரிவித்தபோது, இதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல என்றும் இலங்கை மின்சாரசபைதான் பொறுப்பு என்றும் கூறி, இலங்கை மின்சார சபை சுன்னாகம் பகுதியிலுள்ள பொறியியலாளருக்கு கடிதம் ஒன்றும் தந்து முறைப்பாடு செய்யுமாறு கூறியிருந்தார்.

பாவனையாளராகிய நாங்கள் சுன்னாகம் இலங்கை மின்சார சபை அலுவலகத்தில் பிரதம பொறியியலாளரிடம் சென்று, விசேஷ ஆணையாளரின் கடிதத்தை சமர்ப்பித்து, கதைத்தபோது, இக்கோளாறு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு சுழிபுரம் கிராமசபைதான் பொறுப்பு என்று கூறிவிட்டார். இதற்கு யார் பொறுப்பு சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

**கே. நாகேஸ்வரன்**
சித்தன்கேணி.

## இலாபம் பெற்றது

(நெல்லியடி)

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் அல்வாய் தெற்கு மத்திய கிளை, கடந்த பெப்ரவரி மாதம் 1262 ரூபா சுத்த இலாபமாகப் பெற்றுள்ளது. இக்கிளையின் கடந்த பெப்ரவரி மாதம் 61,238 ரூபா விற்குப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### நாடும் நடப்பும்

முந்தாநாள் காலை எட்டரை மணிக்கு கொழும்புக்கு ஒரு தொலைபேசி அழைப்புப் பதிவு செய்தேன். 'ஐந்து மணித்தியாலம் தாமதம் என்று தெரிவிக்கப்பட்டது பிற்பகல் நான் கேட்காமலேயே தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தினரே என்னை அழைத்து, உங்களுடைய கொழும்புத் தொலைபேசி அழைப்புக்கிடைப்பதற்கு மேலும் சிறிதுநேரம் தாமதமாகலாம்' என்று அறிவித்தார்கள்.

மாலை ஐந்தேகால்வரை காத்திருந்து அலுத்துப்போன நான மீண்டும் பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்கொண்டு விசாரித்தேன். இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடும்' என்று வாக்களித்தபடி ஐந்தே முக்கால் மணியளவில் தந்தார்கள் ஆனால் பிரயோசனமில்லை. எமக்கு செய்திதரக்காத்திருந்தவர் போய்விட்டார்.

ஃ ஃ ஃ

பனம் பொருள் அபிவிருத்திச்சபை பற்றி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் ஒருவர் தெரிவித்ததாக ஒருகருத்து வெளிவந்தது இதற்குப் பதிலாக பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் பதில் தலைவர் விளக்கம் கொடுத்து ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். சபையின் பணிகள் பற்றியும் அவர் தெரிவித்திருந்தார்.

பனம் பொருள் அபிவிருத்திச்சபை நிறுவப்படவேண்டும் தெங்குப் பொருள் ஆராய்ச்சி நிலையம், றப்பர் ஆராய்ச்சி நிலையம் போன்று பனம் பொருள் ஆராய்ச்சி நிலையமொன்றும் அமைக்கப்பட வேண்டுமென்றும் நீண்டகாலமாகக் குரல் எழுப்பப்பட்டு வந்தது. பாராளுமன்றத்தில் பல தடவைகள் பிரேரணை கொண்டுவரப்பட்டது. ஒருபடியாக இன்றுபனம்பொருள் அபிவிருத்திச்சபை உருவாக ஏதோ முயற்சி செய்யத் தொடங்கியிருக்கிறது.

பனம் பொருள் அபிவிருத்திச் சபை வேண்டுமென்று குரம் கொடுத்தவர்களும் மற்றும் இதுபோன்ற யோசனைகளைச் சொன்னவர்களும் எந்த முயற்சியும் எடுப்பதற்கு முன்னரே தனிமனிதனாக பனை நலைக்கும் பனம்பொருள் உற்பத்தி அபிவிருத்திக்கும் இன்றும் சேவை செய்து வரும் தாலகாவலர் கனகராசாவை எல்லோருமே மறந்து விடுவார்கள் போலிருக்கே!

ஃ ஃ ஃ

முன்னைய அரசாங்க காலத்தில் மரவரிமுறை நீக்கப்பட்டு தவறனை முறைகொண்டு வரப்பட்டு தெங்கு பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்கப்பட்டன அவை சில நல்ல சேவைகளையும் செய்யத் தொடங்கின.

முன்னைய அரசாங்க காலத்தில் சீனியின் விலை இருத்தல் ஏழு ரூபாயாக அதிகரிக்கப்பட்டபோது தரமான பனங்கட்டிகளை உற்பத்தி செய்து கைகொடுத்தது இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தான். ஆனால் இந்த அரசாங்கம் வந்து சீனியின் விலையைக் குறைத்ததும் பனங்கட்டி உற்பத்தித் தொழிற்சாலைகள் யாவும் மூடப்பட்டன.

எழுபது பனங்கட்டித் தொழிற்சாலைகள் இயங்கின. இன்று மீண்டும் ஏழு தொழிற்சாலைகள் இயங்குவதற்கு ஆரம்பித்துள்ளன

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி எம். பிக்களுக்கும் மாவட்ட அமைச்சர் பதவி

## ஜனாதிபதி ஆணைக்குழு சிபார்சு

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தலைவர்களாக மாவட்ட அமைச்சர்கள் பதவி வகிக்கவேண்டும்.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம், பி.க்களையும் மாவட்ட அமைச்சர்களாக நியமிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள்பற்றி ஆராய வேண்டும்.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் மேற்கண்டவாறு அரசுக்கு சிபார்சு செய்துள்ளது

நிர்வாகத்தைப் பரவலாக்குவதற்காக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நிறுவுவதுபற்றி ஆராய்வதற்காக முன்னாள் பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோன் தலைமையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த அறிக்கையிலேயே மேற்கண்ட சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

பேராசிரியர் ஏ. ஜே. வில்சன், கலாநிதி நீலன் திருச்செல்வம், கலாநிதி ஜே.ஏல். குரே, பேராசிரியர் கே. எம். டி. சில்வா, ஜனாப் ஏ. சி. எம். அமீர், ஜனாப் எம். ஏ. அஸீஸ், திருவாளர்கள் கே. நவரத்தினராஜா, என். வி. பி. பண்டிதரத்ன ஆகியோர் இக்குழுவின் ஏனைய அங்கத்தவர்கள்.

இந்த ஆணைக்குழுவின் ஏனைய முக்கிய சிபார்சுகள் வருமாறு:

உள்ளூராட்சி நிறுவனங்களின் அமைப்பு, நிதி, மத்தி-உள்ளூர் தொடர்பு முறை ஆகியவற்றை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும்.

இந்த அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளவாறு அபிவிருத்திச்சபைகள், சட்டத்தினுல் உள்ளூராட்சிச் சபைகளாக மாற்றப்படக்கூடாது.

உள்ளூர் மக்கள் மீது மாவட்ட அபிவிருத்தித்திட்டத்தின் ஏற்றத்தைக் கூட்டுவதற்கும் மொத்த நோக்கங்களை அடைவதற்கும் பகுதித்திட்டங்களின் ஒருங்கிணைப்பைப் பாதுகாப்பதற்கும் கூட்டு பன்முறை ஒழுங்கு [illegible]ற்றிய கலந்துரையாடல்கள் [illegible]டத்தப்படவேண்டும்.

ஒவ்வொரு மாவட்டச [illegible] சருக்கும் உரிய உத்தியோக பூர்வமான கடமைகள் அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்படல் வேண்டும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் மூலம் ஒதுக்கப்படும் முழுத்தொகையும் மாவட்ட அமைச்சரின் பொறுப்பிலேயே விடப்படவேண்டும்.

### மாவட்ட அமைச்சர் அதிகாரம்

அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரங்களையும் கடமைகளையும் அளிக்கின்ற பல்வேறு சட்டவாக்கங்களையும் ஆராய்ந்து இயலக்கூடியஇடங்களில் பொருத்தமான திருத்தச் சட்டங்கள் மூலம் அவ்வாறான அதிகாரங்களும் கடமைகளும் மாவட்ட அமைச்சர்களின் கைகளில் ஒப்படைக்கப்படவேண்டும்.

அரசாங்கக் கட்சியினைச் சேராத எம். பி. க்களை மாவட்ட அமைச்சர்களா நியமிக்கக்கூடிய சாத்தியங்கள் ஆராயப்படவேண்டும்.

### உறுப்பினர் தெரிவு

அபிவிருத்திச்சபைகள், அந்த மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

மொத்த உறுப்பினர் தொகையும் தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பொருத்தமான அமைச்சரால் தீர்மானிக்கப்படவேண்டும்.

மாவட்டம் ஒன்றின்மொத்த எம், பி. க்களின் தொகை மூன்று அல்லது அதற்குக்குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அன்றி எம். பீக்கள் அல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கை எந்த ஒரு மாவட்டத்திலாவது எம். பிக்களின் எண்ணிக்கைக்குக் கூடுதலாக இருக்கக் கூடாது.

### தேர்தல்

ஒவ்வொரு பொதுத்தேர்தலிலும் இரண்டாவது பட்டியல் ஒன்றைச்சமர்ப்பிக்குமாறு அங்கீகரிக்கப்பெற்ற கட்சிகளை வேண்டுவதன்மூலமும் அவ்வாறான கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு அமைவாக தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் என்று குறிப்பிடப்படும் உறுப்பினர் குழாம் அபிவிருத்திச் சபைகளுக்குத் தெரிவுசெய்யப்படவேண்டும்.

அடுத்த பொதுத்தேர்தல் நடைபெறும் வரைக்கும் இரண்டு மார்க்கங்களில் ஒன்றைக் கைக்கொள்ளலாம். முதலாவது 1977ம் ஆண்டுபொதுத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளை, அபிவிருத்திச் சபைக்கு அனுமதி பெறுவதற்கான பெயர்ப்பட்டியல்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டிக் கொள்ளுதல். 1977 பொதுத் தேர்தலில் அத்தகைய கட்சிகள் மாவட்டத்தில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கிணங்க அந்தப் பட்டியல்களிலிருந்து ஆட்கள் தெரிவு செய்யப்பட்டவர்களாகப் பிரகடனப்படுத்தப்படுவார்கள். மாற்றுவழியானது, தேவையான எண்ணிக்கை கொண்ட அங்கத்தவர்களை நியமித்துக்கொள்ளும் அதிகாரத்தைக் குறித்த அமைச்சரி

(5-ம் பக்கம் பார்க்க)

# மாவட்ட அமைச்சர் அபிவிருத்திச் சபையில் இருக்கக்கூடாது

## நீலனின் தனிப்பட்ட அறிக்கை

(கொழும்பு)

மாவட்ட அமைச்சர் மாவட்ட அபிவிருத்திச் சபையின் உறுப்பினராக இருக்கக்கூடாது சபையின் தலைவராக ஒருவர் தனியாகத் தெரிவுசெய்யப்படவேண்டும். அவசியம் ஏற்படுமிடத்து மாவட்ட அமைச்சர் சபைக்கு தகவல்களை வழங்கவோ அங்கு உரையாற்றக் கூடியதாகவோ இருக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வம் தாம் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் கமிஷனில் அங்கம் வகித்தவரான கலாநிதி நீலன் திருச்செல்வம் கமிஷன் அறிக்கையில் ஒப்பமிடாது தனியான ஓர் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்ட துணை சட்டவாக்க அதிகாரங்களுடனை கூட்டிணைந்த அமைப்பொன்றாக, அபிவிருத்திச் சபை இருக்கவேண்டும் வரிகள் விதித்து கடன்கள்பெற அவற்றின் வருமானங்களை முதலிட சபைக்கு நியதிச்சட்ட அதிகாரம் வேண்டும்.

மாவட்டத்தின் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அத்தகைய சபைகளின் நோக்கங்களுக்காக நடைபெற்ற ஒரு பொதுத்தேர்தலில் தெரிவு செய்யப்பெற்ற குறித்தவொரு எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களும்கொண்ட அச்சபை அமையவேண்டும். தெரிவு செய்யப்பட்ட தலைவர் அபிவிருத்திச் சபைக்குத் தலைமை வகிக்கவேண்டும். மாவட்ட அமைச்சர் சபை உறுப்பினராக இருக்கக்கூடாது. ஆனால் உரியவிடத்து தகவல்களை வழங்கவோ சபைக்கு உரையாற்றவோ முடியும். திட்டத்தின் அங்கமாக அமையாத முயற்சிகள் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தின் முகாமை ஒருங்கிணைப்புத் தொழிற்பாட்டில் அவர் ஈடுபாட்டைக் கொண்டிருப்பார்.

### மாவட்ட அபிவிருத்தி நிதி

அத்தகைய சபைகளினால் அறவிடப்படும் மானியங்கள் வருமானம், கட்டணங்கள், கடன்கள் மாவட்ட அபிவிருத்தி நிதியில் வரவிடப்படவேண்டும்

மாவட்ட மட்டத்திலுள்ள அரசியல் நிறைவேற்று அமைப்பு நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும் அதுவே சபைக்குக் கூட்டாகப் பொறுப்பாகவிருக்க வேண்டும். மாவட்ட அமைச்சினாலும் தலைவரினாலும் நியமிக்கப்பட்ட சபை 3 அல்லது 4 உறுப்பினர்களைக் கொண்டு அமையவேண்டும்.

சபையின் தொழிற்பாடுகளில் பின்வருவன அடங்கவேண்டும்.

(அ) மாவட்ட அபிவிருத்தித் திட்டம் வகுக்கப்படுதல்.

(ஆ) மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் செயற்பாடு.

(இ) மாவட்ட அபிவிருத்தியின் ஒருங்கிணைப்பும் மதிப்பாய்வும்.

(ஈ) மாவட்ட அபிவிருத்தி நிதியில் உரித்தாக்கப்பட்ட நிதியின் செலவினம்.

நிறைவேற்றுக் குழுவின் தொழிற்பாடுகள்.

(அ) நகல் மாவட்ட அபிவிருத்தித் திட்டம் வகுக்கப்படுதல்.

(ஆ) மாவட்ட அபிவிருத்தித் திட்ட செயற்பாடும் மாவட்ட நிர்வாக மேற்பார்வையும்.

(இ அபிவிருத்திச் சபை வழங்கக் கூடிய வேறு ஏதாவது அதிகாரங்கள்.

சபைகளுக்கு வழங்கப்படும் விடயங்கள் சம்பந்தமான மாவட்ட அபிவிருத்தித் திட்டமொன்றைச் சபை வகுக்கலாம் என்பதுவே இதன் பொருளாகும். திட்டம் "அங்கீகரிக்கப்பட்டவுடன்", திட்டத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய விடயங்கள் சார்பில், நிருவாகத்திற்கான பொறுப்பைச் சபை கொள்ள வேண்டும். நிரலிற்குப் புறம்பான விடயம் சார்பில், அபிவிருத்தித் திட்டம் எதுவும் சபையினுல் வகுக்கப்படலாம். அவ்வாறன திட்டத்தை மாற்றும்படி அரசாங்கத்திடம் விண்ணப்பிக்கலாம்.

அச்சபைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்வதற்குச் சுயாதீன மானியக்குழு அதிகாரங்கள் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் மானிய முறைத் திட்டமும் உருவாக்கப்படவேண்டும்.

அபிவிருத்திச் சபைகள், சகல பட்டின சபைகளினதும் கிராம சபைகளினதும் சட்டபூர்வ வாரிசாகத் திகழ வேண்டும். அத்துடன், கிராமிய பிரதேசங்கள் தொடர்பிலான உள்ளூராட்சி பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச நிறுவனங்களினுல் நிதியளிக்கப்படும் ஒன்றிணைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திசெயற் திட்டங்களின் செயற்பாட்டை அபிவிருத்திச் சபைகள் துரிதப்படுத்த வேண்டும்.

மாவட்ட நிர்வாகங் கொண்டிருக்க வேண்டியவை:

சபையால் நியமிக்கப்படும் அலுவலர்களும் பணியாளர்களும்:

(ஆ) மத்திய அரசாங்கத்தினுல் அச்சபைகளுக்கு நியமிக்கப்படக்கூடிய அலுவலர்கள் அல்லது அச்சபைகளினுல் பயன்படுத்தப்படும்சேவைகள்.

# "தமிழ் இளைஞர்களின் முயற்சியால் நாடகக்கலை புத்துயிர் பெறுகிறது"

(பண்டத்தரிப்பு)

"மூவேந்தர்களினுல் போற்றிப் பாதுகாத்து வளர்க்கப்பட்ட முத்தமிழ்க் கலைகளில் ஒன்றுன நாடகக்கலை தமிழகத்தில் இன்றும் சிறப்பானதொரு இடத்தைப் பெற்று மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றது நமது நாட்டிலும் சினிமாவின் தாக்கத்தினுல் நாடகக்கலை ஓரளவு பாதிப்புக்குள்ளான போதிலும் கலை ஆர்வம் கொண்ட தமிழ் இளைஞர்களின் முயற்சியால் இன்று புத்துயிர் பெற்று வருகின்றது" [illegible]

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடலியடைப்பு கலைவாணி நாடக மன்றத்தின் "சிரும் சிறப்பும்" நாடகத்தின் நூறுவது மேடைஏற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் சி. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது "பண்டைக்காலம் தொடக்கம் நாடகங்கள் தமிழ் மக்கள் மத்தியில் சிறந்ததொரு கலையாக மதிக்கப்பட்டு வந்தது. இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் காவியத்தில் இயல் இசைத் துறைகளுடன் நாடகத்துறைக்கும் முக்கியத்துவம் கொடுத்து சிறப்பான இடம் வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம் பிற்காலத்தில் தமிழகத்தில் பரவிய பௌத்த சமண சமயங்களைச் சார்ந்தோர் இந்த நாடகங்களும் நடனங்களும் மக்களிடையே ஒழுக்கக் கேட்டை ஏற்படுத்த ஏதுவாகின்றன என்று தப்பான பிரசாரம் செய்ததினுல் பெருமை வாய்ந்த நாடகக்கலையும் நடனக்கலையும் நாட்டில் கீழ் நிலையடையக்காலவெள்ளத்தில் அமிழ்ந்து [illegible] ஆரம்பித்தது. சுதந்[illegible] [illegible] [illegible] இக்கலைகள் மீண்டும் [illegible] மக்கள் மத்தியில் புத்துயிர் [illegible] பெற்றன. தமிழகத்தில் [illegible] முதலியார் போன்றோரும் ஈழத்தில் கலையரசு சொர்ணலிங்கம் போன்றோரும் பல நாடகங்களை உருவாக்கி நாடகக்கலைக்கு புத்துயிர் ஊட்டினர்கள் இன்று பிரபல சினிமா நடிகர்கள் நடிகைகளாக விளங்குவோர் நாடகக்கலையில் [illegible] இருந்து வந்தவர்களேயாகும்.

"நமது நாட்டில் மன்னர் மட்டக்களப்புப் பிரதேசங்களில் நாட்டுக்கூத்து போன்ற நாடகங்கள் கடந்த 50—60 ஆண்டுகளாகப் பிரபல்யம் பெற்று விளங்கிவருகின்றன. யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் வட்டுக்கோட்டைப்பகுதியில் பல இடங்களில் பாம்பரை [illegible] [illegible] நாட்டுக்கூத்துகள் நடை[illegible] [illegible] [illegible] போகவிடாது எமது இளம் சந்ததியினர் தாமும் கைக்கொண்டு பாதுகாக்க வேண்டும்.

நகைச்சுவையுடன் நல்ல கருத்துக்களை நாடகங்கள் மூலம் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் சிறந்த பணியில் வடலியடைப்பு கலைவாணி நாடக மன்றத்தினர் ஈடுபட்டு வருவதை பாராட்டாமல் இருக்கமுடியாது என்ருர்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பாராட்டுப்பத்திரம் ஒன்றை நாடக மன்றத்தலைவரிடம் வழங்கி உரையாற்றுகையில் கலையார்வம் மிக்க இளைஞர்களின் நாடகப்பணிக்கு பொதுமக்கள் ஆதரவு வழங்கி ஊக்கிவிக்க முன்வர வேண்டும் என்றும் ஒருநாடகத்தை 100 தடவைகள் மேடையேற்றியது பெரும் சாதனையாகும் என்றும் குறிப்பிட்டார்.

### மாதர் சங்கம்

[நெல்லியடி]

வதிரி விநாயகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடன, நாடக, சங்கீத பாலர் வகுப்பு ஒன்றை புதிதாக ஆரம்பித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ "யாழ். பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவருக்கு பிரச்னை இல்லை!"

# முஸ்லிம் மாணவரை அனுமதிக்குமாறு

# ஜனாதிபதிக்கு மாணவர், விரிவுரையாளர் மகஜர்!

## அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் கோரிக்கைக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், முஸ்லிம் மாணவர்கள் சில கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள் என்று காரணம் காட்டி அவர்களை அங்கு அனுமதிக்கக்கூடாது என்று முஸ்லிம் கல்வி மகாநாடு கேட்பது அர்த்தமற்றது மட்டுமின்றி, முஸ்லிம்களின் உயர் கல்வி வளர்ச்சிக்குப் பாதகமானதுமாகும்.**

**"முஸ்லிம் சமுதாயத்தினதும் தேசிய ஒருமைப்பாட்டினதும் நலன் கருதி, அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் தவறான கோரிக்கையை நிராகரித்து. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முஸ்லிம் மாணவர்களை அனுமதிப்பதில்லை என்ற முடிவை மாற்றிக்கொள்ளுமாறு உயர் கல்வி அமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றோம்.**

இவ்வாறு உயர் கல்வி அமைச்சருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும் அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்.

இம்மகஜரில், யாழ் பல்கழக உதவி விரிவுரையாளர்களான ஜனாப் எம். ஏ. நுஃமான் (தமிழ்த்துறை) கலாநிதி எம். இஸட், எம். மல்ஹர்தீன் (கணிதத்துறை) மௌலவி கே எம். எச். காலிதீன் (அரபு இஸ்லாமிய நாகரிகத்துறை) மௌலவி எம். ஐ. அப்துல் ரஸ்ஸாக் (அரபு இஸ்லாமிய நாகரிகத்துறை) மற்றும் ஜனாப் எம். எச் பாரூக் தலைவர் முஸ்லிம் மஜ்லிஸ்) ஜனாப் ஏ. எம். ஹுஸைன் செயலாளர் முஸ்லிம் மஜ்லிஸ்) ஆகியோர் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் சார்பில் கையெழுத்திட்டுள்ளனர்.

மகஜரின் பிரதிகள், ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனவுக்கும் மற்றும் செயலாளர் பல்கலைக்கழக மானியக் குழு, அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாடு, பாராளுமன்ற முஸ்லிம் எம். பிக்கள் பிரதி உயர் கல்வி அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் வேண்டுகோளுக்கு இணங்கி, இனிமேல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், எனினும் யாழ்ப்பாணத்தில் அல்லது அதற்குக் கிட்ட உள்ள பகுதிகளில் வாழும் முஸ்லிம் மாணவர்கள் விரும்பினால், கல்வி உயர்கல்வி அமைச்சரின் அனுமதியின் பேரில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு அவர்கள் அனுமதிக்கப் படுவார்கள் என்றும் கல்வி, உயர்கல்வி அமைச்சர் அறிவித்துள்ளதாக சில பத்திரிகைகளில் வெளிவந்தசெய்திகள் தொடர்பாக பின்வரும் உண்மைகளைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

"இப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு இல்லாத விசேடமான கஷ்டங்கள் எதையும் அனுபவிக்கவில்லை என்பதை நாம் திட்டவட்டமாக அறியத்தருகிறோம். மலைநாடு. மட்டக்களப்புப் போன்ற தூர இடங்களைச் சேர்ந்த அநேக தமிழ் மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் பயில்கின்றார்கள், அவர்கள் எதிர் நோக்காத பிரச்னைகள் எதையும் இங்கு முஸ்லிம் மாணவர்கள் எதிர் நோக்கவில்லை. பிற மாகாணங்களைச் சேர்ந்த முஸ்லிம் மணவர்களுக்கு யாழ்ப்பாணம் தூரப்பிரதேசமாக இருப்பது ஒரு பிரச்னை என இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாடு கருதியிருக்கலாம். ஆனால் இது முஸ்லிம் மாணவர்களுக்கு மட்டும் உரிய பிரச்னை அல்ல. மட்டக்களப்பு, மலைநாடு போன்ற தூரப் பிரதேசங்களை சேர்ந்த தமிழ் மாணவர்களுக்கும் இது பொருந்தும். ஆயினும் உயர்கல்வியில் நாட்டமுடையோருக்கு இடைத்தூரம் ஒரு பிரச்னை என்பதை அறிவுலகம் ஏற்றுக் கொள்ளாது. அதிலும் "சீனா சென்றாலும் கல்வி தேடுங்கள்" எனப்பணித்த முகமது நபி (ஸல்) அவர்களின் போதனையைப் பின்பற்றும் முஸ்லிம்கள் இதையொருபிரச்னையாகக் கொள்ள மாட்டார்கள் என்று நாம் நம்புகிறோம்.

"விடுதி வசதி இன்மையே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்னையாகும். இதுவும் முஸ்லிம் மாணவர்களுக்கு மட்டுமன்றி தூர இடங்களைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் பொதுவான பிரச்னையாகும். பல்கலைக்கழக சுற்றுடலை வசிப்பிடமாகக் கொள்ளாத யாழ்ப்பாணக் குடாநாட்டு மாணவர்கள்கூட இங்கு இதே பிரச்னையை அனுபவிக்கின்றார்கள். இன்னும் ஒருவகையில் நோக்கினால், இது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு மட்டும் உரிய பிரச்னையுமல்ல பேராதனை தவிர்ந்த சகல பல்கலைக்கழகங்களுக்கும் உரிய பொதுப் பிரச்னையே இது பல்கலைக்கழக நிர்வாகத்தினலும், உயர்கல்வி அமைச்சினலும்தீர்த்துவைக்கப்பட வேண்டிய சில பொதுப் பிரச்சினைகளைத் தவிர யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் முஸ்லிம் மாணவர்கள் விசேடமான கஷ்டங்கள் எதையும் அனுபவிக்கவில்லை என்பதை நாம் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். இங்கு முஸ்லிம் மாணவர்கள் மட்டும் கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள் என்று யாரும் கூற முனைந்தால் அது உண்மைக்குப் புறம்பானது மட்டுமன்றி பிரச்சினையை குறுகிய மனப்பாங்குடன் அணுகுவதாகவும் அமையும்.

"இத்தகைய பொதுப்பிரச்னைகளின் மத்தியிலும் கல்வித் துறையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் முஸ்லிம் மாணவர்கள் மிகுந்த திறமைகாட்டி வருகின்றனர் என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் கடந்த ஆண்டு (1979) நடைபெற்ற பொதுக்கலைத் தேர்வு இறுதிப் பரீட்சையில் கலைப்பீடத்தைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் இரண்டாம் வகுப்பில் தேறி சிறப்புப் பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர் இவர்கள் இரும் முஸ்லிம் மாணவர்களே என்பதை நாம் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். கல்வித் துறையைப் பொறுத்தவரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முஸ்லிம் மாணவர்கள் எவ்வித பிரச்னைகளையும் எதிர்நோக்கவில்லை என்பதற்கு இதைவிட வேறு சான்றுகள் தேவையில்லை என்று நம்புகிறோம்.

(8-ம் பக்கம் பார்க்க)

# தந்தைசெல்வா நினைவாலயம்

## அறங்காவல் குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவாலயத்தின் சுற்றுப்புற பள்ளத்தை நிரப்புவதற்கு பொதுமக்களின் தாராள ஒத்துழைப்பை அறங்காவல்குழு கோரியுள்ளது

இம்மாதம் 26ந் தேதி நினைவாலயத் திறப்புவிழா வைபவம் நடைபெறவிருப்பதால் அதற்கு முன்னதாக, சுற்றுப் புறப் பள்ளங்களை நிரப்ப கல், மண், மக்கி ஆகியவற்றை வண்டி, லொறி, டிராக்டர் ஆகியவற்றின் மூலம் கொணர்ந்து அன்பளிப்பாக உதவும்படி அறங்காவல் குழுவின் சார்பில் கோப்பாய் எம். பி திரு சி. கதிரவேலுப்பிள்ளை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பான விபரங்களை தம்மிடமோ, அல்லது திரு. ஈழவேந்தனிடமோ பெற்றுக்கொள்ளலமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

தந்தை செல்வாவின் மறைவு தொடர்பான இரங்கலுரைகள், செய்திகள் ஆகியவற்றைக்கொண்ட 'நினைவஞ்சலி' ஒன்றையும் அன்றைய தினம் மலர்க்குழு வெளியிடவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது (ம

தெல்லிப்பழையில் பரபரப்பு!

# 12 வயதுச் சிறுமியின் மர்ம மரணம்!

## கயிற்றில் தொங்கியபடி இறந்து கிடந்தார்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழையில் வீடொன்றில் பணியாற்றிய 12 வயதுச் சிறுமி, மர்மமான முறையில் கயிற்றில் தொங்கியபடி இறந்து கிடந்தது இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த தம்பையா குணரத்தினம் என்பவரது வீட்டில் பணியாற்றிய சந்திரா எனப்படும் சிறுமியே இவ்வாறு மரணமானவராவர்.

வீட்டின் பின்புறத்தில் கயிற்றில் தொங்கியபடி இறந்து கிடந்த இச்சிறுமியின் மரணம் குறித்து மாவட்ட நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் விசாரணை நடத்தியதுடன் ஸ்தலத்திற்கும் விஜயம் செய்து பார்வையிட்டார்.

சிறுமியின் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சென்றுள்ள சட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். சரவணபவான் யாழ் திரும்பியதும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மரணத்திற்கான காரணம் என்னவென்பது மர்மமாகவிருப்பதால் இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஸ்தாபகர் தினம்

(மாவிட்டபுரம்)

கொல்லங்கலட்டி சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை ஸ்தாபர் தினமும், பெற்றோர் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று பாடசாலை மைதானத்தில் நடைபெறுகிறது.

## எதிர்க்கட்சி...

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

ம் வழங்குவதாகும்.

**சபையின் கடமைகள்**

அபிவிருத்திச் சபைகளின் கடமைகள் வருமாறு:—

மாவட்ட அபிவிருத்திவேலைத் திட்ட பிரேரணைகளைப்பெற்றுக் கொள்ளுதல்.

அதனுடைய சொந்தமானது அல்லது மற்றவர்களிடமிருந்து பெற்ற பிரேரணைகளின்அடிப்படையில் அமைந்த பொருத்தமான ஏதாவது அபிவிருத்தி நடவடிக்கைகளை மாவட்ட அமைச்சருக்குப் பிரேரித்தல்.

மாவட்ட அமைச்சரினால் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப அபிவிருத்தித் திட்டம் ... [illegible] ஏற்றுக்கொள்ளுதல். (இ)


# வைத்திலிங்கம்ஸ்

∵ உறுதியானதும்
∵ நீடித்து உழைப்பதும்
∵ தன்னிகரற்றதுமான

'றிவர்' பிராண்ட்

கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு, கொழும்பு - 12

தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் அமெரிக்கா இராணுவ வசதிகளைப் பயன்படுத்தும்

## உயர் மட்டக்குழு மேற்காஸியா செல்கிறது

வாஷிங்டன், ஏப். 3

மத்திய கிழக்கில் இராணுவ வசதிகளைப் பயன்படுத்தும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயும் பொருட்டு அமெரிக்க உயர்மட்டக்குழு ஒன்று மத்திய கிழக்குநாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளது.

சோவியத் யூனியன் தமது ஆயுதபலத்தை அதிகரித்து வருவதையடுத்தே அமெரிக்கா மத்திய கிழக்கில் இராணுவவசதிகளைப் பயன்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களைக் கொண்ட குழுவே மத்திய கிழக்கு செல்கிறது.

சவூதி அரேபியா, ஓமான், குவெய்த், சோமாலியா, சிரியா, லிபியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் இக்குழு அந்தந்த நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தும்.

ஓமானிலும், சோமாலியாவிலும் இராணுவத் தளங்களை அமைக்க அமெரிக்காவுக்கு அந்த நாட்டுத் தலைவர்கள் ஏற்கனவே அனுமதிவழங்கியுள்ளது தெரிந்ததே. (இ)

### ஈராக் துணைப்பிரதமருக்கு குண்டுவீச்சு

# ஈரான் மீது ஈராக் பழிவாங்கும்

## ஜனாதிபதி எச்சரிக்கை

பெய்ரூத், ஏப். 3

ஈராக் பிரதிப்பிரதமர் ஜனாப் தாரிக் அஸீஸும் மற்றும் சில மாணவர்களும் சிந்திய இரத்தத்துக்கு ஈரான்மீது பழிக்குப் பழி வாங்காமல் விடப்போவதில்லையென்று ஈராக்ஜனாதிபதி ஜனாப் சதாம் ஹுசெய்ன் எச்சரிக்கை செய்துள்ளார்.

பக்தாத்நகரிலுள்ளபல்கலைக்கழகத்தில்நடைபெற்ற கூட்டமொன்றில் ஈராக் பிரதிப்பிரதமர் பேசிக்கொண்டிருக்கையில் இடம்பெற்ற குண்டுவீச்சு சம்பவம் ஒன்றில் ஜனாப் அஸீஸும் மற்றும் சில மாணவர்களும் மடைந்தனர்.

இச்சம்பவத்திற்கு ஈரானே பொறுப்பு என்றும் ஈரான்மீது பழிக்குப்பழி வாங்குவது தவிர்க்க முடியாததென்றும் ஜனாதிபதி ஹுசெய்ன் தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதலை நடத்திய ஈரானியரான நூர் அலி உடனடியாக பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். (இ)

### ★ பாகிஸ்தானுக்கு 40 கோடிடாலர் உதவி

# கார்ட்டரின் திட்டம் கைவிடப்பட்டது!

வாஷிங்டன், ஏப். 3

பாகிஸ்தானுக்கு 40 கோடி டாலர் பொருளாதார, ஆயுத உதவிகளைவழங்கும்திட்டத்தை அமெரிக்கா கைவிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் ஊடுருவலை மேற்கொண்டதையடுத்து அமெரிக்கா பாகிஸ்தானுக்கு 40 கோடி டாலர் ஆயுத, பொருளாதார உதவிகளை வழங்கவேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு ஜிம்மிகார்ட்டர் தீர்மானித்திருந்தார். அடுத்து இது குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக்குடன் பேச்சு நடத்த விசேட குழு ஒன்றை பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அனுப்பியிருந்தது.

இந்த உதவிகள் போதாது என்றும் இதைவிட அதிக உதவி தேவையென்றும் முதலில் கேட்ட பாகிஸ்தான் எதுவித உதவியும் தேவையில்லை என்று அமெரிக்காவிடம் தெரிவித்திருந்தது. [இ]

## ஆயுத பலத்தை பிரிட்டனும் அதிகரிக்கிறது

லண்டன், ஏப். 3

பிரிட்டன் தனது படைபலத்தைப் பெருக்கும் நோக்குடன் ஆயுத உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைஎடுத்துவருகிறது.

ஆப்கானிஸ்தான் நெருக்கடியைஅடுத்து சோவியத்யூனியன் தனது படைபலத்தை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே பிரிட்டிஷ் அரசு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

அணுஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும் பிரிட்டன் இப்போது தீவிரகவனம் செலுத்திவருகிறது. (இ)

### அணுகுண்டு சோதனைநடாத்தும்

## வசதியோ வாய்ப்போ பாகிஸ்தானுக்கு இல்லை!

### வெளிநாட்டு அமைச்சு மறுப்பு

இஸ்லாமாபாத், ஏப். 3

இந்தியா தனது 2-வது அணுகுண்டை வெடிக்க ஆயத்தப் செய்துவரும் வேளையில் இதனால் ஏற்படும் தாக்கங்களை மறைக்கவே பாகிஸ்தான் அணுகுண்டு சோதனை நடத்தவுள்ள

(7-ம் பக்கம் பார்க்க)

**நிபுணர்களைக் கேளுங்கள்!** ஜே. வி. சி.யின் உண்மையான தொனிக்கு யப்பான் விக்ரர் கம்பனியின் உன்னதமான தயாரிப்பிலான ரெலிவிசன்கள் 12" 14" 17" 20" 24" எல்லா அளவுகளிலும் குறைந்த விலைகளில் விற்பனையாகின்றன. இன்றே ஒன்றை தெரிவு செய்யுங்கள். இந்தச் சலுகை 30-4-80 வரை மட்டும்.

★ தெளிவான ஒளி

★ உண்மையான தொனி

★ கவர்ச்சியான தோற்றம்




★ குறைவான மின்சக்தி

★ உறுதியான தயாரிப்பு

★ இலகுவான ரியூனிங்

அத்தனையும் ஒருங்கே அமையப்பெற்றது ஜே. வி. சி. ரெலிவிசன்கள்

விற்பனைக்குப் பின் தொழில்நுட்ப வல்லுனர்களால் நம்பிக்கையான சேவை அளிக்கப்படும்

**JVC TELEVISION**

ஏரியல் இணைத்துக் கொடுப்பதில் வல்லுனர்கள்

எதற்கும் எம்மைக் கலந்து ஆலோசியுங்கள்

அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் !

**ரேடியோ மனுவல்**

121, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொலைபேசி : 8222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (கல்லூண்டாய்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
A.V.M. ராஜன்
தெய்வம்
(கலர்-புதிய பிரதி)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ்-சௌகார் ஜானகி
நீர்க்குமிழி
(புதிய பிரதி)

—LAST FEW DAYS ONLY—
SANTHI JAFFNA — Phone: 7642.
Daily 10-30 a m, 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
'SPECIAL DELIVERY"
ADULTS! ACTION PACKED!! COLOR!!!
Await! "DIAMOND'S"—in color

வெலிங்டன்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - லலிதா
தூக்குத்தூக்கி
5-4-80 முதல் பாகப்பிரிவினை

லிடோ (யாழ்.நகர்) தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 போன்: 7693
Next Time I Will Kill You

4th CROWDED WEEK
REGAL JAFFNA Phone 360
Daily 4 shows
Daily at a. m. 2-00, 4-30, 7-00 & 9-30 p m
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

RANEE [Jaffna]
Daily at 10-00 a. m., 2-30, 4-45, 7-15, 9-45 p. m.
its a hilarious, outrageous 3,000 mile road race at 180 miles an hour.
And its all Just for glory
MICHAEL SARRAZIN, NORMANN BURTON in
THE GUMBALL RALLY

ராஜா - (யாழ்நகர்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன் நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

மனோஹரா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
தனிப்பிறவி (புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7.15, 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி மற்றும்பலர் நடித்த
நிறம் மாறுத பூக்கள்
(வண்ணப்படம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) 10-4-80 வரை மட்டும் தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா சுந்தரராஜன் நடித்த
திருடன் (புதிய பிரதி)
11-4-80 முதல் புத்தாண்டு வெளியீடு:
இரத்தத்தின் இரத்தமே (ஈஸ்மன் கலர்)


## உதைபந்தாட்டப் போட்டி

[பலாலி]

வலி-வடக்கு தெல்லிப்பளை உதவி அரசாங்க பிரிவு உதைபந்தாட்டக் கழகங்களிடையே விளையாட்டமைச்சின் அனுசரணையுடன் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்று முடிந்துள்ளது.

1 ம்பிரிவுகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில்மயிலிட்டி கண்ணகி வி.கழகமும், தெல்லிப்பளை திருமகள் வி.கழகமும் கலந்து கொண்டன.

சிமெந்து தொழிற்சாலை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இப் போட்டியில் கண்ணகி வி கழகம் 4-2 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. மத்தியஸ்தராக திரு. நாகரட்ணம்கடமையாற்றினு

## செல்வா நினைவு விசேஷ பூசை

(பண்டத்தரிப்பு)

அமரர் தந்தை செல்வநாயகத்தின் 83வது பிறந்த தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளையின் சார்பில் வட்டுக்கோட்டை துறட்டிப்பனை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை நடத்தப்பட்டது வட்டுக் கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவும் இப் பூசையில் கலந்து கொண்டனர்.

## அணுகுண்டு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகப் பொய்ப்பிரசாரம் செய்கிறது.

இவ்வாறு பாகிஸ்தான்வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

அணுசோதனை நடத்தும் வசதிகளோ வாய்ப்புக்களோ பாகிஸ்தானுக்குக் கிடையாதென்றும் வெளிநாட்டமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு இறுதியில் அல்லது அடுத்தாண்டு முற்பகுதியில் பாகிஸ்தான் அணுகுண்டு சோதனையை நடத்துமென்று இந்திய பாதுகாப்பு ஆய்வுநிலையம் அண்மையில் அறிவித்திருந்ததை அடுத்தே பாகிஸ்தான்வெளிநாட்டமைச்சு மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டது. (இ)


வெலிங்டன்... வெஸ்லி
(சாவகச்சேரி)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி—தேவிகா
இதயத்தில் நீ
(புதிய பிரதி)


## "சமூக ஏற்றத்தாழ்வுகளை விளையாட்டுப்போட்டிகள் குறைக்கின்றன"

(நெல்லியடி)

"சமுதாயத்திலுள்ள சமூக ஏற்றத்தாழ்வுகள் உட்பட அனைத்து குறை நிறைகளையும் விளையாட்டுப் போட்டிகள் மூலம் குறைத்துக் கொள்ள முடியும். அந்நோக்கத்தின் அடிப்படையிலே விளையாட்டுப் போட்டிகளை அரசாங்கங்கள் ஊக்குவித்து வந்துள்ளன."

மேற்கண்டவாறுஉடுப்பிட்டி எம் பி. திரு இராசலிங்கம் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு மு. தம்பிமுத்து தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது ஒருவரினது வெற்றியிலும் தோல்வியிலும் மற்றவர்கள் பங்கு கொள்ளும் சிறந்த உளப்பாங்கு இவ்வாறான போட்டிகள் மூலம் வளர்த்தெடுக்கப்படுகின்றன. சுயநலவாதம் வளர்ந்து வரும் இக் காலகட்டத்தில் இவ்வாறான சிறந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வது பயனுடையதாகும்.

விளையாட்டுத்துறை இளைஞர்களினதும் குழந்தைகளினதும் முதியோர்களினதும் உடல் தேகாரோக்கியத்தினை வளர்த்து நாட்டிலுள்ள மனித சமுதாயத்தினை பூரணத்துவம் வாய்ந்த தாக்கி நாட்டிற்கும் நமக்கும் பேருதவி புரிகின்றது என்றார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் நெல்லியடி எஸ். ரீ ரீ. விளையாட்டுக் கழகம் சிறந்த கழகமாகத் தெரிவு செய்யப்பட்டது.

## இன்று மின்னொளியில் கரபந்தாட்டம்

(கரவெட்டி)

கரவை 'ஹெற்ரா' விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடாத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவிருக்கிறது.

இருபகுதிகளாக நடாத்தப்படும் "ஓவர் கேம்" போட்டியில் 4 பிரிவுகளிலும் அநேக கழகங்கள் போட்டியிடுகின்றன. இரு பிரிவுகளிலும் நடைபெறும் போட்டியில் முதலிடங்களையும் பெறும் கழகங்களுக்கு வெற்றுக் கேடயங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இப் போட்டிகள் 7ம் திகதி வரை நடைபெறுகின்றன.

## இல்லப்போட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் சவுவன்ட் இல்லம் முதலாவது இடத்தையும் கில்லீஸ் இல்லம் இரண்டாவது இடத்தையும் புளோமு இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

## மட்டக்களப்பில் அஞ்சலி

(மட்டக்களப்பு)

திருகோணமலை முன்னாள் நகர பிதா திரு வெ. வெற்றிவேலுவின் அகால மரணம் குறித்து மட்டக்களப்பிலிருந்து அன்னாரின் குடும்பத்திற்கு அதிகமானவர்கள் அனுதாப செய்திகளை அனுப்பியுள்ளதுடன் பலர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பில் ஒரு சில இடங்களில் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன,

தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புச் செயலாளர் திரு. இரா. வாசுதேவா தனது அனுதாப செய்தியில் "அன்னாரின் மரணம் எதிர்பாராத மரணம் ஆகும். அன்னாரை இழந்து தவிக்கும் அவர் வருக்கும் தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்ம சாந்தியடைய பிரார்த்திப்போமாக" என்று தெரிவித்துள்ளார்.

## மணவாளக்கோல திருவிழா

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு முத்தன் காடு கந்தசாமி கோவில் மணவாளக்கோல விழா அண்மையில் நடைபெற்றது

பகல் சுவாமிக்கு நவகோத்ரசதசங்காபிஷேகமும் இரவு திருவூஞ்சலும் அதைத் தொடர்ந்து முத்துச்சப்பறத்தில் முருகப் பெருமான் மணவாளக் கோலத்தில் எழுந்தருளியகாட்சியும் இடம் பெற்றன. (கொ-அ)


## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### தேவை

| பதவி | தரம் | சம்பளத்திட்டம் | தகைமைகள் |
|---|---|---|---|
| கிளை முகாமையாளர் | III | 180 — 320 / 8 10 — 10 6 பிற விசேஷ படிகளும் | 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. (சாதாரண) சித்தியும் 1 வருட கால அனுபவமும் |

வயது: 21 — 35 வருடங்கள்

பின்வருவனவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

1. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
2. அண்மையில் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்
3. கல்வித்தகைமை, அனுபவம், வசிப்பிடம் சம்பந்தமான சான்றிதழ்கள்

பிணை: ரொக்கம் ரூபா 2000-00
ஆதனப்பிணை: ரூபா 5000-00 அல்லது ரொக்கம் ரூபா 2500-00

விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளருக்கு விலாசமிட்டு கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு 18-4-'80க்கு முன்பு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

பொது முகாமையாளர்.

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
2-4-'80.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)
சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.
SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## தபால் ஊழியரின் லீவுகள் ரத்து!

[கொழும்பு]
தபால் தந்தித் தொடர்பு ஊழியர்களின் சகல லீவுகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. தற்போது லீவில் நிற்கும் ஊழியர்களும் உடனடியாக வேலைக்குத் திரும்பவேண்டும் என்றும் தபால்மா அதிபர் திரு. ஏ. ஆர். எம். ஜெயவர்த்தன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொழும்பு தபால் தந்திப் பகுதி ஊழியர்கள் சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தை மேற்கொண்டு வருவதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




## முஸ்லிம் மாணவரை.........
## "கல்வி வாய்ப்பளிக்கும் ஒரே பல்கலைக்கழகம்"

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழ்மொழி மூலம் உயர்கல்விகற்கும் மாணவர்களுக்கு இன்று அதிக கல்வி வாய்ப்பையும் வசதியையும் அளிக்கும் ஒரே பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வளர்ச்சியடைந்துள்ளது. கலைத்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் இலங்கையிலேயே அதிக தகைமையும் அனுபவமும் வாய்ந்தபேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பலர் இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயிற்றுகின்றார்கள். கிட்டிய எதிர்காலத்திலே சில குறிப்பிட்ட கல்வித்துறைகளில் இலங்கையில் மட்டுமன்றி தென்னாசியாவிலேயே மிகச் சிறந்த உயர்கல்விநிறுவனமாக வளரும் தகைமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உண்டு என்பதைக் காண்கின்றோம். தவிரவும் வர்த்தகம், முகாமையியல், அரசறிவியல், சமூகவியல், மொழியியல், கணிதம், புள்ளிவிபரவியல் போன்ற துறைகளை தமிழ் மூலம் பயிலும் வாய்ப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உண்டு என்பதையும் சுட்டிக்காட்டவிரும்புகின்றோம். இத்தகைய ஒரு பல்கலைக்கழகத்தின் கல்விச் செல்வத்தை முஸ்லிம் மாணவர்கள் பெறும் வாய்ப்பை அவர்களுக்கு மறுக்குமாறு கோருவது, முஸ்லிம் சமூகத்துக்குச் செய்யும் ஒரு துரோகமாகவே நாம் கருதுகின்றோம்.

எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் எல்லா இனத்தைச் சேர்ந்த மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்று கோருவதே தேசிய நலனுக்கும் இனங்களின் சமூக உறவிற்கும் உகந்த ஆரோக்கியமான கோரிக்கையாக அமையும். அந்தவகையிலே அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் கோரிக்கை தேசிய ஒருமைப் பாட்டிற்கு முரணான கோரிக்கையாகும் எனறு நாம் வலியுறுத்திக்கூற விரும்புகிறோம். ஆகவே உயர் கல்வி அமைச்சர் இதுவரை நாங்கள் சுட்டிக்காட்டிய கருத்துக்களை மனம்கொண்டு முஸ்லிம் சமூகத்தினதும் தேசிய ஒருமைப்பாட்டினதும் நலன்கருதி, அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் தவறான கோரிக்கையை நிராகரித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முஸ்லிம் மாணவர்களை அமைப்பதில்லை என்ற முடிவைமாற்றிக்கொள்ளுமாறு மிகுந்த பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (கொ-கு)

## உயிர்ப்பலி நிறுத்தம்

(பண்டத்தரிப்பு)
கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக மாதகல் முனியப்பர் ஆலயத்தில் நடை பெற்று வந்த வருடாந்த உயிர்ப்பலி உற்சவம் இம் முறை நிறுத்தப் பட்டது.

கடந்த காலங்களில் இவ் வாலயத்தில் நடைபெற்று வந்த உயிர்ப்பலியை நிறுத்துமாறு இப் பகுதியிலுள்ள இந்து இளைஞர் இயக்கப் பிரமுகர்களும் மற்றும் சைவ சமய அபிமானிகளும் கோரி வந்த போதிலும் அது சாத்தியப்படவில்லை தற்போது பிராந்திய அபிவிருத்தி தமிழ் அமுலாக இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு.செ. இராசதுரையினால் கொண்டுவரப்பட்ட மிருக பலி தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் இவ்வாலயத்தில் இவ் வருடம்நடைபெறவிருந்த வருடாந்த உயிர்ப்பலி முற்றாக நிறுத்வப்பட்டுள்ளது. இதையிட்டு இப் பகுதியிலுள்ள சமய பிரமுகர்களும் மற்றம் சைவ சமயப் இயக்கத்தின ரும்மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# உ. அரசாங்க அதிபர்களுக்கு பயிற்சிவகுப்பு

(மாவிட்டபுரம்)
உதவி அரசாங்க அதிபர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி வகுப்பு அச்சுவேலி கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் இம்மாதம் 21-ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது

நாடு பூராவிலுமிருந்து உதவி அரசாங்க அதிபர்கள் பங்குபற்றும் இப்பயிற்சி வகுப்பை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆரம்பித்து வைப்பார். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கமும் இதில் கலந்து கொள்வார்.

சரித்திர, புவியியல் தொடர்பான விரிவுரைகள், விவசாய அபிவிருத்தி பொருளாதார முன்னேற்றம், கலாச்சார மறுமலர்ச்சி தொர்டர்பான விரிவுரைகள் என்பன இத்துறைகளில் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களால் உதவி அரசாங்க அதிபர்களுக்கு போதிக்கப்பட உள்ளது.

பயிற்சி முடிவில் சுற்றுலாவொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டு பல இடங்களுக்கும் உதவி அரசாங்க அதிபர்கள் அழைத்துச் செல்லப்பட்டு விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளது.

## அசுரவேகசாரதிகள் மீது பொலிஸார் கண்காணிப்பு

(மாவிட்டபுரம்)
காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபரினஉத்தரவின் பேரின் வீதியில் அசுர வேகத்தில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைத் கைது செய்வதில் காங்கேசன்துறைப் பொலிசார் இப்பொழுதுஈடுபட்டுள்ளனர்.

போக்குவரத்திற்கு இடைஞ்சல் விளைவிக்கும் வகையிலும் விபத்துக்களை ஏறபடுத்தும் முறையிலும் வீதிகளில் அசுர வேகத்தில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை கைது செய்து வழக்குத்தொடருமாறு காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு.லுஷ விஜயக்கோன் காங்கேசன் துறைப் பொலிசாரைப் பணித்துள்ளார்.

இதற் கிணங்க இதுவரைபல சாரதிகள் கைதுசெய்யப்பட்டு மல்லாகம்நீதிமன்றத்தில்ஆஜர் செய்யப்பட்டபோது தலா 25 ரூபா அபராதம் விதிக்கப் பட்டது.

## மானிப்பாய் செல்வத்தின் வேகநடை சாதனை முயற்சி

[யாழ்ப்பாணம்]
வேகநடையில் புதிய உலக சாதனையொன்றை ஏற்படுத்தும்முகமாக மானிப்பாயைச் சேர்ந்த திரு. க. செல்வம், இன்று காலை தமது முயற்சியை மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் ஆரம்பிக்கவுள்ளார்.

வேகநடைச் சாதனை முயற்சியை, ஆனைக்கோட்டைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. சரத்சந்திரா ஆரம்பித்துவைப்பார்.

மத்தியஸ்தர் குழுவில் மானிப்பாய் வை. எம். சி. ஏ. கழகமும், மானிப்பாய் இந்து விருத்திச் சங்கமும் கடமையாற்றும். (கெ)



## மனைவி...

1-ம் பக்கத் தொடர்ச்சி

லாவின் வயிற்றுக்குள் ஏதாவது நச்சுத்திராவகப் பொருட்கள் இருக்கவில்லை என்பதைத் திடமாகத் தெரிவிக்கிறேன்'' என்றார்.

மரண விசாரணையின் பின் நீதவான் கொலையெனத் தீர்ப்பளித்தார்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சந்திரா குணரத்தின விசாரணைக்குப் பொறுப்பாக இருந்தார்.

சந்தேகநபர்களை இம்மாதம் 17ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டு, மேல்விசாரணையை அன்றைய திகதிக்கு ஒத்தி வைத்தார்.

மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி,மதுரை,பம்பாய்,கோலாலம்பூர்,சிங்கப்பூர்,பரிஸ்,லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா நாகம்மா

அளவெட்டியைச் சேர்ந்தவரும், காலஞ்சென்ற களுத்துறை ஓவசியர் செல்லையாவின் அன்பு மனைவியுமாகிய செல்லையா நாகம்மா காலமானார். இவர் அளவெட்டி காலஞ்சென்ற வைத்திலிங்கம், காலஞ்சென்ற கந்தையா, இராமுப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், உரும்பராய் அரசினர் மருத்துவசாலை டாக்டர் பரமநாதனின் சிறியதாயாருமாவர். அன்னார்ன் பூதவுடல் 16, இராசவீதி, நல்லூர் இல்லத்திலிருந்து நாளை 5-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

5394

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News paper at the General Post office Sri Lanka under No. GE/8948/78
The Eelanaadu, Post Box No 49, Telegram 'Eelanadu' Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org